# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11.691 — 1959 මාර්තු 6 වැනි සිකුරාදා — 6 3.1959**

11,691 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 6 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II)—விளம்பரங்கள்

## பதவி வெற்றிடம்

### சௌக்கியப் பகுதி

**பொதுச் சௌக்கிய மருத்துவிச்சிமார் பதவிகள்**

சௌக்கிய சேவைப்பகுதியில் பொதுச் சௌக்கிய மருத்துவிச்சிகள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் மாதிரிப் பத்திரத்தில் உள்ளபடி விண்ணப்பங்களைத் தயாரித்து, " சௌக்கிய சேவை அதிபதி, தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு " என்று விலாசமிட்டு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கத்தக்கதாக அவற்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் காகித மேலுறையின் இடது மேல் மூலையில் " பொதுச் சௌக்கிய மருத்துவிச்சி பதவிகளுக்கான விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும்.

2. **சம்பள விகிதமும் சேவையின் நிபந்தனைகளும்.**—இப்பதவிகளுக்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் சம்பளம் பின்வருமாறு : ஆரம்ப சம்பளம் வருட மொன்றுக்கு ரூபா 696—ரூபா 19 வீதம் 18 சம்பள உயர்வு பெற்றபின் ஆகக்கூடிய வருடாந்தச் சம்பளம் ரூபா 1,038 ஆகும். (ரூபா 822 ஐயும் ரூபா 948 ஐயும் பெறு முன்பு திறமைக் கடப்புப்படிகள் உண்டு).

3. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானவையும் இளைப்பாற்றுச் சம்பள முள்ளவையுமாகும். நியமனம் மூன்று வருடத்திற்கு பரீட்சார்த்தரீதியில் இருக்கும். தகுதியுடைய பரீட்சார்த்திகளுக்கு ஆரம்பத்தில் கீழ்க்கண்ட மாகாணங்களில் பதவிகள் காலியாக வரும்போது, தொழில் அளிக்கப்படும். பரீட்சார்த்திகள் வேலை செய்ய விரும்பும் மாகாணங்களின் பெயர்களை வரிசைக்கிரமமாகக் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(அ) வட மாகாணம்,
(ஆ) கீழ் மாகாணம்,
(இ) வட மத்திய மாகாணம்.

4. **தேவையான தராதரங்கள்.**—(அ) 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ந் திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) பதிவு செய்யப்பட்ட மருத்துவிச்சியாயிருத்தல் **வேண்டும்.** மருத்துவிச்சியாகப் பயிற்சியிலீடுபட்டிருந்தவர்களுக்கு **விசேஷ சலுகை** காட்டப்படும்.

5. **உடைகள் (யூனிபோம்).—கடமையாற்றும் நேரங்களில் அணி**வதற்கு உடைகள் (யூனிபோம்) **வழங்கப்படும்.**

6. விண்ணப்பங்கள் எனது சொந்த விலாசத்திற்கோ, இப்பகுதியில் உள்ள வேறு எந்த உத்தியோகத்தரின் சொந்த விலாசத்துக்கோ அனுப்பப்படுதல் கூடாது.

7. மேற் கூறிய தகுதிகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் விண்ணப்பதாரர்களுக்குத் தனித்தனி அறிவிக்கப்படவும் மாட்டாது.

8. கேட்கப்பட்டிருக்கும் சாட்சிப் பத்திரங்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படக்கூடாது. அவற்றின் நகல்கள் **மாத்திரமே** விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய சாட்சிப் பத்திரங்களின் நகல்களோ, மூலப்பிரதிகளோ (அனுப்பப்பட்டிருப்பின்) திருப்பி அனுப்பப்படமாட்டாது.

9. இந்த வர்த்தமானியில் (கெசற்) முதலாம் பாகம் இரண்டாம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடும்படி கோரப்படுகிறது.

எம். பெரியதம்பி,
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

கொழும்பு,
1959 ம் ஆண்டு பெப்பிரவரி மீ 25 ந் உ.

### விண்ணப்ப மாதிரிப்பத்திரம்

1. முழுப்பெயர் : ——————.
(தனித்தனி எழுத்துக்களில்).

2. விலாசம் : ——————.

3. பிறந்த திகதியும் வருடமும் : ——————.

(பிறப்புப் பத்திரத்தின் நகல் இணைக்கப்படுதல் வேண்டும்).
(உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களை அனுசரிக்கும் நோக்கமாக வழங்கப்பட்ட ஞானஸ்நானப் பத்திரம் அல்லது பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

4. எந்த தேசப் பிரஜை : ——————.

5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? ——————.
விவாகமானவராயிருந்தால் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக :—

(அ) கன்னிப் பெயர் : ——————.

(ஆ) கணவனின் தொழிலும் வேலை செய்யும் இடத்தின் பெயரும் : ——————.

(இ) பிள்ளைகளின் தொகை : ——————.
மூத்த பிள்ளையின் வயது : ——————.
இளைய பிள்ளையின் வயது : ——————.

(விவாகமான விண்ணப்பதாரர்கள் தங்கள் கணவரிடமிருந்து, தங்கள் மனைவிமார்களை இப்பகுதியில் மருத்துவிச்சிகளாக நியமனஞ் செய்வதையிட்டுத் தங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையுமில்லையென்ற விருப்பத்தைக் காட்டும் கடிதமொன்றை வாங்கிச் சமர்ப்பித்தல் வேண்டும்).

6. மருத்துவிச்சிகளுக்கான இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி : ——————.

பயிற்சி பெற்ற பாடசாலையின் பெயர் : ——————.

1. தாபனத்தின் பெயர் : ——————.

2. வெளிக்கரும இடத்தின் பெயர் : ——————.
(பெற்ற சாட்சிப்பத்திரத்தின் நகலை இணக்குக).

7. அண்மையிற் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களின் நகல்கள் இணைக்கப்படல் வேண்டும்.

8. **கீழ்க்கண்ட பாஷைகளில் அறிவு உண்டா ?**

| | வாசினை | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| சிங்களம் | — | — | — |
| ஆங்கிலம் | — | — | — |
| தமிழ் | — | — | — |

9. முன்பு அரசாங்கத்தின் கீழ் ஏதாவது சேவையில் இருந்திருந்தால் வகித்த பதவிகளின் பெயர்களும், சேவையிலிருந்த திகதிகளும் : ——————.

10. விண்ணப்பதாரர் நியமனம் பெற விரும்பும் மாகாணங்களின் வரிசைக் கிரமமான பெயர்கள் : ——————.

11. மேல் குறிப்பிடப்பட்டுள்ள சேவை நிபந்தனைகளுக்கு உடன்படுகிறீரா ? ——————.

12. நான் முன்பு ஒரு போதும் அரசாங்க சேவையிலிருந்து தகுதியற்ற தன்மைக்காக விலக்கவோ, விலக்கப்படவோ இல்லையென்றும் நீதி மன்றத்தில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளுக்காகத் தண்டிக்கப்படவில்லையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவை சம்பந்தமான பொய்யான உறுதி மொழிக்குத் தண்டனையாக, உடனடியாகச் சேவையிலிருந்து விலக்கப்படுவதாயிருக்கும் என்பதையும் நான் உணருகிறேன்.

——————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ——————.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## வித்தியா பகுதி

**கண்டிய நடன உபகரணங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள்—1958/59**

கண்டிய நடன உபகரணங்கள் விநியோகஞ் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள், வெள்ளிக்கிழமை, 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ந் திகதி, பி. ப. 2.30 மணிவரை கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா பகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்களை அனுப்ப விரும்புவோர், " வித்தியாதிபதி, (விநியோகக் கிளை), வித்தியா பகுதி, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு விண்ணப்பஞ் செய்து வேண்டிய விபரங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்களை அனுப்ப விரும்புவோரில் கொழும்பி லுள்ளவர்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள வித்தியா கந்தோரின் கணக்குக் கிளையிலும், கொழும்புக்கு வெளியேயுள்ளவர்கள் ஆங்காங் குள்ள கச்சேரியிலும் ரூபா 100 கட்டியதாகப் பற்றுச்சீட்டைக் காட்டி, 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ந் திகதிவரை சாதாரண வேலை நேரத்தில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

எல். டி. எஸ். கருணாரத்தின,
வித்தியாதிபதிக்காக.

வித்தியா பகுதி,
மலாய் வீதி, கொழும்பு 2,
1959 ம் ஞூ பெப்ருவரி மீ 28 ந வ.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

நிதி வருடம் 1958–59, கொழும்பு வெளிக்கடைச் சிறைச்சாலைக்கு கொழும்பு மக்கலம் வீதியிலுள்ள K. V. மரக்காலையில் இருந்தும் கொழும்பு புகையிரதக் காலையில் இருந்தும், மரங்கள் ஏற்றியிறக்க, 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ந் திகதி, காலை 9.30 மணிவரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். முழுவிபரங்களுக்கு 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 6 ந் திகதி அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆங்கிலப் பகுதியைப் பார்க்கவும்.

ஜே. ஏ. பெருமாள்,
அதிபா, சிறைச்சாலைத் தொழிற் பகுதி.

கொழும்பு 9,
1959 ம் ஞூ பெப்ருவரி மீ 26 ந வ.

## அரசாங்க கோரிக்கைகள்

செட்டிகுளம, இறம்பைக்குளம், நெடுங்கேணியாகிய இடங்களில் கிணறு, மலசலகூடம் கூடிய வீடுகள் கட்டுவதற்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரவர்களால் 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ந் திகதி, செய்வாய்க் கிழமை, காலை 9.30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும்.

வவுனியாக் கச்சேரியிலிருந்து 1959 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் திகதி, பிற்பகல் 3.00 மணி முன் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் சமர்ப்பிக்கும் பொழுது வவுனியா அரசாங்க அதிபர் அவர்கள் பேரில் ரூபா 25 கச்சேரியில் கட்டியதற்கான பற்றுச் சீட்டு இணைத்தல் வேண்டும்.

மற்றும் விபரங்கள் வவுனியாக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம.

டி. எம. எ. ஸ்பெல்டவின்,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

வவுனியாக கச்சேரி,
1959 ம் ஞூ பெப்ரவரி மீ 28 ந வ.

---

## கச்சேரி—புத்தளம்

மாதம்பையில் தச்சுத்தொழில் பள்ளிக்கூடம் ஒன்று நிறுவுவதற்கு புத்தளம் கச்சேரி, அரசாங்க அதிபரால் கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 26 ந் திகதி, வியாழக்கிழமை, 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்படி கேள்விப்பத்திர முழுவிபரங்களுக்கும் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்கவும்.

ஜி. எம். ஸ்பார்க்ஸ்,
அரசாங்க அதிபர், புத்தளம்.

புத்தளம் கச்சேரி,
1959 ம் ஞூ பெப்ரவரி மீ 16 ந வ.

1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி நோக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகர் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்டல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நக்லே " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. 1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி) அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன்பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவுசெய்யப்படும்.

14. சந்தா விகிதங்கள்—

| | ரூ. | ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சந்தா .. .. | 15 | 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | 7 | 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி .. | 0 | 25 | |
| | 0 | 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 10 | |
| | 0 | 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு விண்ணப்பிக்கவேண்டும்.